**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**வகுப்பு 1 & 2 – சூழ்நிலையியல்**

தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025, தொடக்கநிலைக்கான சூழ்நிலையியல் பாடமானது செயல்பாடு, விளையாட்டு மற்றும் அனுபவம் சார்ந்த கற்றலை வலியுறுத்துகிறது. இப்பாடம், குழந்தைகள் தம் உடல்நலம், சுகாதாரம், உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றின் உலகம் ஆகியவற்றை ஆராய்ந்து புலன் உணர்வுவழி விழிப்புணர்வை வளர்த்துக்கொள்ள வழிகாட்டுகிறது. மேலும் இப்பாடத்திட்டம் குழந்தைகளுக்குத் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி அறியும் நோக்கிலும் ஆர்வம், வியப்பினை ஏற்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தம்மையும் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தையும் புரிந்துகொள்ள உதவும் அறிவாற்றல் திறன்கள், திறமைகளை வளர்த்தெடுக்க உதவுகிறது. அறிவியல்வழி நின்று குழந்தைகளின் சிந்தனை மற்றும் செயல்பாட்டில் ஆராய்ந்தறியும் செயல்முறைகளை அறிமுகப்படுத்துகிறது. அத்துடன் வயதுக்கேற்ற தகவல்களின் அடிப்படையிலான பொறுப்பான முடிவுகளை எடுக்கவும் தெரிவுகளைச் செய்யவும் தங்கள் கற்றலை அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் குழந்தைகளை ஊக்குவிக்கிறது. மேலும், அறிவியல் கற்றலும் தொழில்நுட்பமும் வாழ்க்கையைப் பலப்படுத்தவும் அனைவரின் நல்வாழ்வுக்குப் பங்களிக்கவும் முடியும் என்பதை உறுதி செய்கிறது. குழந்தைகளைத் தம்மைத் தாமே வழிநடத்தும் திறனுள்ள கற்பவர்களாக மாற்றவும் சக குழந்தைகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவும் நெறிப்படுத்துகிறது. மொத்தத்தில், பன்முகத் தன்மை கொண்ட சமூகத்தில் சமூக மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மைக்கான விழிப்புணர்வையும் பாராட்டுதலையும் மரியாதையையும் குழந்தைகளிடத்தில் வளர்க்கிறது.

| **வகுப்பு 1** | | **வகுப்பு 2** | |
|---|---|---|---|
| **பாடப்பொருள்** | **கற்றல் விளைவு** | **பாடப்பொருள்** | **கற்றல் விளைவு** |
| **கலைத்திட்ட இலக்கு –1: குழந்தைகள் தங்களை வெளிப்படுத்தவும், ஒப்பார் குழுவினருடன் ஒத்துழைக்கவும் கற்றுக்கொள்ளுதல்.** | | | |
| **நானும் எனதும்**<br>▪ என்னைப் பற்றி | குழந்தைகள்,<br>• தனது பெயர், தான் பேச மற்றும் புரிந்து கொள்ளத் தெரிந்த மொழிகள், தான் விரும்பிச் செய்யும் செயல்கள், உணவு, உடை, விளையாட்டு சார்ந்து தனது விருப்பு, வெறுப்புகள் | **எனது வகுப்புத் தோழர்களுடன்**<br>▪ நண்பர்களைப் பற்றிய பாடல்<br>▪ குழுவாக இயங்கும் செயல்பாடுகள்<br>▪ ஒருவர் தனது வாய்ப்பிற்காகக் காத்திருத்தல், கவனித்தல், முந்துதல் மற்றும் நெருக்குதல் | குழந்தைகள்,<br>• வகுப்புத்தோழர்களுடன் இயைந்திருப்பர்.<br>▪ வகுப்புத்தோழர்கள், வகுப்பாசிரியர் ஆகியோர் பெயர்களைக் கூறுவர்.<br>▪ தனது நண்பரைப் பற்றிப் பகிர்ந்து கொள்வர்.<br>▪ குழுச் செயல்பாடுகளில் வழிமுறைகளைப் |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றில் அறிமுகம் பெறுவர் . | செய்யாது வரிசையைப் பின்பற்றுதல் போன்ற சமூகப் பழக்கவழக்கங்கள் | பின்பற்றிப் பங்கேற்பர். (எ.கா – உயரத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துதல், மூன்று பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்தல்)<br>▪ குழுச் செயல்பாடுகளில் ஈடுபடும்பொழுது வெவ்வேறு சூழல்களில் அனுபவித்த உணர்வுகள் பற்றிப் பேசுவர்.<br>▪ முகபாவனைகளின் வழியே தம் உணர்வுகளை வெளிப்படுத்துவர்.<br>▪ முகத்தில் வெளிப்படும் உணர்வுகளைக் குறியீட்டுச் சின்னங்களாக வரைவர்; அடையாளம் காண்பர். |
| **கலைத்திட்ட இலக்கு–2: குழந்தைகள் தங்கள் உடலின் பாகங்கள் மற்றும் இயக்க ஒருங்கிணைவுகள் குறித்துப் பல்வேறு அசைவுகள் மூலம் விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளுதல்.** | | | |
| **எனது உடல்**<br>▪ உடல் உறுப்புகளின் பெயர்கள்<br>▪ உடலின் இயக்கங்கள்<br>▪ உடல் உறுப்புகள் பற்றிய பாடல்கள்<br>▪ இணையான, தனித்த உடல் உறுப்புகள்<br>▪ விரல்களின் பெயர்கள் – (விரல்கள் பற்றிய பாடல்கள்) | ▪ தன்னால் தன்னிச்சையாகச் செய்ய இயலும் செயல்களை (என்னால் விளையாட முடியும், என்னால் நடக்க முடியும், என்னால் வரைய முடியும் போன்றவை) கண்டறிவர், வெளிப்படுத்துவர்.<br>▪ வழிமுறைகளைப் பின்பற்றி உடல் மற்றும் முகத்தின் நுண்ணிய, பெரு இயக்கங்களில் மகிழ்ச்சியுடன் பங்கேற்பர். (எ.கா. ஓடுதல், திரும்புதல், குதித்தல், எடுத்தல், நசுக்குதல், பிழிதல், | **எனது உடல்**<br>▪ வலது மற்றும் இடது உள்ளங்கைகள், பாதங்கள்<br>▪ உடலில் மேல்–கீழ், வலது–இடது, மையம், முன்–பின் பகுதிகள் | ▪ வலது, இடது உள்ளங்கைகள், பாதங்களை அடையாளம் காண்பர்.<br>▪ தனது உடலில் மேல், கீழ், வலது, இடது, நடு, முன், பின் ஆகியவற்றைப் புரிந்து கொள்வர்.<br>▪ அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இயங்குவர். (எ.கா., உனது வலது கையை உயர்த்தி தலையின் மேல் பகுதியைத் தொடு, உனது இடது காலை உயர்த்தி இடது புறமாக நகர்த்து)<br>▪ தனது ஒப்பார் குழுவினருக்கு இயக்கம் மற்றும் செயல்பாடுகளுக்கான சில கட்டளைகளைக் கொடுப்பர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | புன்னகைத்தல், கண் சிமிட்டுதல் போன்றவை)<br>▪ உடல் உறுப்புகளின் பெயர்களைக் கூறுவர்.<br>▪ இணையாகவும் தனித்தும் காணப்படும் உடல் உறுப்புகளை அடையாளம் காண்பர்.<br>▪ விரல்களின் பெயர்களைக் கூறுவர். நுண் இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வர். (விரல்களைப் பயன்படுத்தித் தானியங்களைப் பிரிப்பர்) | | (எ.கா., இராணி சொல்கிறாள்…, இரவி சொல்கிறான்…) |
| **கலைத்திட்ட இலக்கு–3: குழந்தைகள் புலனுணர்வு விழிப்புணர்வு மற்றும் வேறுபடுத்தி அறியும் திறன்களைப் பல்வேறு செயல்பாடுகளின் மூலம் மேம்படுத்திக் கொள்ளுதல்.** | | | |
| **எனது புலனுணர்வுகள்**<br>▪ ஐந்து புலனுணர்வுகள் மற்றும் புலனுறுப்புகள்<br>▪ ஐந்து புலனுணர்வுகளுடன் தொடர்புடைய பொருள்களைக் குறிப்பதற்கான சொற்களஞ்சியம் | ▪ தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய புலனுணர்வு அடிப்படையிலான விழிப்புணர்வைக் கட்டமைப்பர்.<br>▪ பொருள்களைப் புலனுணர்வு அடிப்படையிலான கூறுகளைக் கொண்டு (காட்சி, தொடு உணர்வு, ஒலி, மணம், சுவை) செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளின் வழி ஒப்பிட்டு வகைப்படுத்துவர். (அடிப்படை நிலை)<br>▪ பொருள்களைப் பொருத்தமான | **எனது புலனுணர்வுகள்**<br>▪ வகுப்பு 1இல் கற்றுக்கொண்ட புலனுணர்வுகள், புலனுறுப்புகள் ஆகியவற்றை வலியுறுத்துதல். | ▪ தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய புலனுணர்வு அடிப்படையிலான விழிப்புணர்வைக் கட்டமைப்பர்.<br>▪ பொருள்களைப் புலனுணர்வு அடிப்படையிலான கூறுகளைக் கொண்டு (காட்சி, தொடு உணர்வு, ஒலி, மணம், சுவை) செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளின் வழி ஒப்பிட்டு வகைப்படுத்துவர். (மேம்பட்ட நிலை)<br>▪ பொருள்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு குறிப்பிடுவர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | சொற்களைக் கொண்டு குறிப்பிடுவர். | | |
| **கலைத்திட்ட இலக்கு –4: குழந்தைகள் சுய பராமரிப்பு, பாதுகாப்பு வழக்கங்கள், நெறிமுறைகளைக் கற்றுக்கொள்ளுதல் மற்றும் நடைமுறையாக்கிக் கொள்ளுதல்.** | | | |
| **சுய பராமரிப்புப் பழக்க வழக்கங்கள்**<br>▪ உடல் பராமரிப்பிற்கான எளிய பழக்க வழக்கங்கள்<br>▪ கை கழுவுதலில் உள்ள படிநிலைகள்<br>▪ வாய் நலம்<br>▪ முடி & நகம் பராமரிப்பு<br>▪ குளியல் மற்றும் கழிவறைப் பழக்க வழக்கங்கள்<br>▪ உணவு உண்ணும் போதும் தும்மும் போதும் இருமும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள்<br>▪ குறிப்பிட்ட வண்ணக் குப்பைக் கூடைகளைப் பயன்படுத்துதல் (இரண்டு வகைகள்: பச்சை மற்றும் நீலம்) | ▪ எளியஉடல்பராமரிப்பு,உடல் தூய்மைகுறித்தபழக்க வழக்கங்களை அறிவர்; பின்பற்றுவர்.<br>▪ வண்ணக் குப்பைக் கூடைகளைப் பயன்படுத்துவர். | **பாதுகாப்பு**<br>▪ வீடு, பள்ளி, சமுதாயத்தில் பாதுகாப்பு<br>▪ சாலைப் பாதுகாப்பு<br>▪ பள்ளி ,வகுப்பறைப்பாதுகாப்பு நெறிமுறைகள்<br>▪ எளிய கருவிகளின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு (பற்குச்சம், கரண்டிகள், கத்தரிக்கோல், கத்தி, நகவெட்டி)<br>▪ தொடுதல் விதிகள், தவறான வகையில் பயன்படுத்துதலில் இருந்து பாதுகாப்பாக இருத்தல், புகாரளித்தல், தனக்குப் பாதுகாப்பான ஒருவரை அடையாளம் காணல். | ▪ வீடு மற்றும் பள்ளியில் தனக்குப் பாதுகாப்பாக இருப்பவரை அடையாளம் காண்பர் மற்றும் தேவையான நேரங்களில் புகாரளிப்பர்.<br>▪ வீடு, பள்ளி, சமுதாயத்தில் பாதுகாப்பு விதிமுறைகளைப் புரிந்து கடைப்பிடிப்பர். |
| **கலைத்திட்ட இலக்கு –5: குழந்தைகள், குடும்பத்தில் உள்ளவர்களின் பங்கினையும் பொறுப்புகளையும் புரிந்து கொள்ளுதல் மற்றும் குடும்பச் செயல்பாடுகளில் பங்கு பெறுதல்.** | | | |
| **எனது குடும்பம்**<br>▪ குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள்<br>▪ வீட்டில் நடைபெறும் செயல்பாடுகள் (சமைத்தல், சுத்தம் | ▪ உறவுமுறைப் பெயரைக் கூறுவர். (வட்டார மொழியிலும், ஆங்கிலத்திலும் உள்ள உறவுமுறைப் பெயர்களை ஒப்பிடுவர்.) | **எனது குடும்பம்**<br>▪ குடும்ப வரைபட மாதிரி<br>▪ குடும்ப உறுப்பினர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்<br>▪ பண்டிகைக் கொண்டாட்டங்கள் / | ▪ குடும்ப உறவுமுறைகளைப் புரிந்து கொள்வர்.<br>▪ குடும்ப உறுப்பினர்களின் படங்களை வடிவங்கள் மூலம் வரைவர்.<br>▪ குடும்ப உறுப்பினர்களின் பங்கு மற்றும் |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| செய்தல், விளையாடுதல்)<br>▪ வயது முதிர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஆதரவளிக்கும் நடத்தை | ▪ தனது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் பெயர்களைத் தங்கள் ஒப்பார் குழுவினரிடம் பகிர்ந்து கொள்வர்.<br>▪ குடும்ப உறுப்பினர்களைக் குச்சிப் படங்களைக் கொண்டு குறிப்பர்.<br>▪ குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து விரும்பிச் செய்யும் செயல்கள் குறித்துப் பேசுவர்.<br>▪ வீட்டிலும் சமுதாயத்திலும் வயது முதிர்ந்தோருக்கு ஆதரவளிப்பர்.<br>▪ வயது முதிர்ந்தோரிடம் பணிவாகவும் மரியாதையாகவும் பேசுவர்; அவர்கள் பேசும் போது கவனித்துப் பதிலளிப்பர்.<br>▪ எளிய வழிகளில் அவர்களுக்கு உதவுவர் (பொருள்களைக் கொணர்ந்து தருதல், கதவைத் திறத்தல்) | வீட்டில் நடக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகள்<br>▪ வயது முதிர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஆதரவளிக்கும் நடத்தை | பொறுப்புகள், பழைமையான நம்பிக்கைகளின் அடிப்படையிலானவை அல்ல என்பதையும் அவை ஒருங்கிணைந்து செயல்படும் தன்மையைக் கொண்டது என்பதையும் புரிந்துகொள்வர்.<br>▪ வீட்டில் நடக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகளை விவரிப்பர். (எ.கா. விழாக்கள், பிறந்தநாள், உல்லாசப் பயணங்கள்)<br>▪ படிநிலைகளைப் பின்பற்றி காகிதத்தால் அலங்காரம் செய்வர்; எளிய வடிவமைப்புகளை வரைவர்.<br>▪ அன்றாடச் சூழ்நிலைகளில் முதியவர்களுக்குத் தானே முன்வந்து தகுந்த உதவிகளைச் செய்வர். |
| **கலைத்திட்ட இலக்கு–6: பள்ளிச்சூழல், நடைமுறைகள் மற்றும் சமுதாயத்துடன் குழந்தைகள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல்.** | | | |
| **எனது பள்ளி**<br>▪ பள்ளியில் முதல் நாள் நிகழ்வு பற்றிய படக்கதை<br>▪ பள்ளியில் உள்ள இடங்களும் மக்களும் | ▪ கதையைக் கவனமுடன் கேட்டு கருத்துகளைப் பகிர்வர்.<br>▪ பள்ளி வளாகம், பள்ளியிலுள்ளவர்களுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொள்வர்.<br>▪ பள்ளியின் தள வடிவமைப்பை | **எனது பள்ளி**<br>▪ பள்ளியின் ஒருநாள் மற்றும் ஒரு வாரத்திற்கான கால அட்டவணை<br>▪ பள்ளி சுற்றுச்சுவர் மற்றும் பள்ளிக்கட்டடத்தின் கோட்டு வரைபடம்<br>▪ கட்ட வரைபடத்தில் (Grid diagram) | ▪ பள்ளியின் ஒருநாள் கால அட்டவணை மற்றும் அதன் நடைமுறையைப் புரிந்து கொண்டு பின்பற்றுவர்.<br>▪ பள்ளியின் தள வடிவமைப்பை எளிய வரைபடம் மூலம் குறிப்பர்.<br>▪ வகுப்பறை இருக்கை அமைப்பைக் கட்ட வரைபடமாகக் குறிப்பிடுவர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | அறிந்து கொள்வர்.<br>▪ பள்ளி, வகுப்பறையில் காணப்படும் பல்வேறு இடங்களைத் தெரிந்து கொண்டு பயன்படுத்துவர்.<br>▪ வகுப்பாசிரியர் மற்றும் உதவியாளர்கள் உட்பட, பள்ளியில் உள்ளவர்களின் பணிகளை அடையாளம் காண்பர். | குறித்தல்<br>▪ பள்ளி நெறிமுறைகளைப் பின்பற்றுதல் | ▪ தவறாமல் பள்ளிக்கு உரிய நேரத்தில் வருவர்.<br>▪ பள்ளியின் நெறிமுறைகளைப் பின்பற்றுவர். வரிசையில் நிற்கும் போது நிற்பவர்களுடன் போதிய இடைவெளியைப் பின்பற்றுவர். பங்களிப்போர், பாதுகாப்போர், ஆசிரியர்கள் ஆகியோரை அங்கீகரிப்பர். |
| **கலைத்திட்ட இலக்கு–7: குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ள பொதுவான பொருள்களை ஆராய்ந்தறிவர்; வகைப்படுத்துவர்; படைப்பாற்றலுடன் பயன்படுத்துவர்.** | | | |
| **என்னைச் சுற்றியுள்ளவை**<br>▪ என்னைச் சுற்றியுள்ள பொருள்கள்<br>▪ வீடு மற்றும் பள்ளியில் உள்ள பொருள்களின் கோட்டுப் படங்கள்<br>▪ எளிய பொம்மைகள் செய்தல்<br>▪ பொருள்கள் மற்றும் கருவிகளுடன் பணியாற்றும் பணியாளர்கள்/ பொருள்கள்/உருவாக்கப்பட்ட பொருள்கள் | ▪ வீடு மற்றும் வகுப்பறையில் உள்ள பொருள்களைப் பெயரிட்டு அழைப்பர்; அவற்றின் பயன்களோடு தொடர்புபடுத்துவர்.<br>▪ வீட்டிலும் வகுப்பறையிலும் உள்ள பொருள்களைக் கோட்டுப் படங்களாக வரைவர்.<br>▪ பயன்களின் அடிப்படையில் பொருள்களை அட்டவணைப்படுத்துவர்.<br>▪ அன்றாடப் பொருள்களைக் கொண்டு எளிய பொம்மைகளை உருவாக்குவர். (காகிதம், உறிஞ்சுகுழல்கள்,பனிக்கூழ் குச்சிகள்)<br>▪ பணியாளர்களை (தையலர், விவசாயி, ஓட்டுநர், சமையலர், | **என்னைச் சுற்றியுள்ளவை**<br>▪ வீடு மற்றும் பள்ளியில் உள்ள பொருள்களின் கோட்டுப் படங்கள்<br>▪ எளிய பொம்மைகள் செய்தல்<br>▪ ஒரே பயன்பாட்டிற்கான, வெவ்வேறு வடிவங்களில் உள்ள பொருள்கள் (எ.கா., வெவ்வேறு வடிவிலான நீர்க்கலன்கள்)<br>▪ ஒரே பொருள் பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுதல். (எ.கா:கயிறு)<br>▪ 'S ' வடிவிலான கொக்கிகள், தாங்கிகள் போன்ற பொருள்களின் படங்கள் | ▪ வகுப்பறை, பள்ளியில் உள்ள பொருள்களைக் கோட்டுப் படங்களாக, வடிவங்களாக வரைவர்.<br>▪ உருவாக்கப்பட்டுள்ள பொருள்கள்/ பயன்பாடு/வடிவம்/அளவு/நிறம் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவர்.<br>▪ அன்றாடப் பொருள்களைக் கொண்டு எளிய பொம்மைகளை உருவாக்குவர். (காகிதம்,உறிஞ்சுகுழல்கள்,பனிக்கூழ் குச்சிகள்....)<br>▪ ஒரே பயன்பாட்டினைக் கொண்ட வெவ்வேறு வடிவமைப்பிலான பொருள்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருவர்.<br>▪ அனைத்து வகையிலும் பயன்படுத்தப்படும் பொருளுக்கு |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | செவிலியர், மருத்துவர்...) அவரவர் பயன்படுத்தும் கருவிகள் மற்றும் பொருள்களுடன் பொருத்தி அடையாளப்படுத்துவர்.<br>▪ வீடு, வகுப்பறை, பள்ளியில் உள்ள பொருள்களை எவ்வாறு ஒருங்கமைப்பது, பயன்படுத்துவது, பாதுகாப்பது என்பன குறித்துக் கற்றுக் கொள்வர். | | செயல்முறை விளக்கம் அளிப்பர். (எ.கா: துண்டுத்துணி...)<br>▪ 'S' வடிவிலான கொக்கி, தாங்கிகள் போன்ற படங்களைப் பார்த்து இவை போன்ற பொருள்கள் எங்கெல்லாம் பயன்படுத்தப்படலாம் என்பதைப் பகிர்ந்து கொள்வர். |
| **கலைத்திட்ட இலக்கு –8: குழந்தைகள், தம்மைச் சுற்றியுள்ளவற்றை ஆராய்ந்தறிந்து உயிருள்ளவை, உயிரற்றவற்றை வகைப்படுத்துதல்.** | | | |
| **பொருள்கள்**<br>▪ வெவ்வேறு வகையான பொருள்கள் – களிமண், மரம், உலோகம், நெகிழி, துணி | ▪ வெவ்வேறு வகையான பொருள்களைத் தொட்டுணர்ந்து அவற்றை விவரிப்பர்.<br>▪ தங்களைச் சுற்றியுள்ள பல்வேறு பொருள்களை உற்றுநோக்கி, அவை எப்பொருள்களால் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை அடையாளம் காண்பர்; பல்வேறு வகையான பொருள்களால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்வர்.<br>அ) வரிசையாகக் கொடுக்கப்பட்ட படங்களுள், வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுப்பர்.<br>ஆ) தொடர்புடைய பொருள்களின் படங்களை ஒன்றுடன் ஒன்று | **உயிருள்ள & உயிரற்ற பொருள்கள்**<br>▪ உயிருள்ள பொருள்களின் பண்புகள்<br>▪ மண், நீர், காற்று போன்ற உயிர் வாழ்விற்கு ஆதரவளிக்கும் உயிரற்ற பொருள்கள்<br>▪ பொருள்களை உயிருள்ள மற்றும் உயிரற்ற என வகைப்படுத்துவதற்கான பண்புகள் | ▪ உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களின் பண்புகளை வேறுபடுத்துவர். (சுவாசித்தல், வளர்தல், உண்ணுதல், நகர்தல், குட்டிகளை ஈனுதல் – உயிரற்றவை இப்பண்புகளைக் கொண்டிருக்காது)<br>▪ தங்களைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களை உற்றுநோக்குவர்; பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துவர்.<br>▪ உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களைக் கோட்டு வரைபடங்களின் மூலம் விளக்குவர்.<br>▪ காற்று, நீர், நெருப்பு போன்ற உயிரற்ற கூறுகள் உயிர் வாழ்வதற்கு உதவுகின்றன என்ற கருத்தைப் புரிந்துகொள்வர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | இணைப்பர்.<br>இ) பொருள்களின் பாகங்கள் கொண்ட படங்களை ஒன்றிணைத்து முழுமையான படத்தை உருவாக்குவர்.<br>அ, ஆ, இ போன்ற விளையாட்டுகளை உருவாக்கி நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வர்.<br>▪ எளிமையாகக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பொம்மைகளை உருவாக்குவர். | | |
| **கலைத்திட்ட இலக்கு–9: குழந்தைகள், தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களை உற்றுநோக்கல், விவரித்தல், ஒப்பிடுதல் மூலம் ஆராய்தல், அக்கறை கொள்ளும் நெறிமுறையை வளர்த்துக் கொள்ளுதல்.** | | | |
| **தாவரங்கள்**<br>▪ தாவரத்தின் பாகங்கள்<br>▪ பொதுவாகக் காணப்படும் மலர்கள்<br>▪ மலர்களைக் கொண்டு அழகுபடுத்துதல்<br>▪ மலர்களைப் பற்றிய புதிர்கள்<br>▪ தாவரங்கள் மீதான அக்கறை | ▪ தங்கள் சுற்றுச்சூழலில் உற்றுநோக்கிய தாவரங்கள் குறித்துப் பகிர்ந்து கொள்வர். – (மரங்கள், மலர்கள், காய்கறிகள், பழங்கள் கொண்ட செடிகள், போன்றவை)<br>▪ தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களை உற்றுநோக்கி, தாவரங்கள் மற்றும் மரங்களின் பாகங்கள் பெயர்களை வாய்மொழியாகக் கூறுவர். (வேர்கள், தண்டுகள், இலைகள், பட்டைகள், | **தாவரங்கள்**<br>▪ பொதுவாகக் காணப்படும் தாவரங்கள்–மரங்கள், புல்வகை, புதர்ச்செடிகள், படர்கொடிகள், பற்றுக்கொடிகள் ஆகியவற்றின் கோட்டுப் படங்கள் (பாகங்கள் குறிப்பிடப்பட்ட)<br>▪ தாவரங்கள், இலைகளைக் குறிப்பிடுவதற்கான சொற்களஞ்சியம்<br>▪ தாவரங்களின் பயன்கள்<br>▪ இலை ஊதல், இலைத் தேய்ப்பு, இலைகளைக் கொண்டு அழகுபடுத்துதல், இலைகளைப் | ▪ தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களை உற்றுநோக்கி பெயர்களைக் (உள்ளூர்/வட்டார மொழிப் பெயர்) கூறுவர்; (எ.கா., மரங்கள், புதர்கள், தரைத்தாவரங்கள், கொடிகள், உயரமானவை, ரோமங்கள் உடையவை போன்றவை) பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி விவரிப்பர். (அமைப்பு, வடிவம், அளவு, தண்டு/பட்டை மற்றும் இலைகளின் நிறங்கள்)<br>▪ அவற்றில் சிலவற்றைப் படங்களாக வரைவர்.<br>▪ பொதுவாகக் காணப்படும் தாவரங்களின் பயன்களை அறிவர். |



TNSCERT-DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | கிளைகள், பழங்கள், மலர்கள், பூவிதழ்கள்)<br>▪ தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களின் பெயர்களைக் கூறுவர். .. (உள்ளூர்/வட்டார மொழிப் பெயர்கள் பயன்படுத்தப்படலாம்)<br>▪ கற்றுக்கொண்ட சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தி, சுற்றுச்சூழலில் உள்ள சில தாவரங்கள் குறித்து விவரிப்பர். (தண்டு/அடிமரம், இலை, பூவிதழ்களின் அமைப்பு, வடிவம், அளவு, நிறம்)<br>▪ உள்ளூரில் கிடைக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தாவரங்களை (எ.கா., தாவரங்கள்) ஒற்றுமை வேறுபாடுகளை உற்றுநோக்குவர்.<br>▪ தாவரங்களின் கோட்டு வரைபடங்களை வரைவர்.<br>▪ தம்மைச் சுற்றிக் காணப்படும் மலர்களின் பெயர்களைக் கூறுவர். எ.கா., ரோஜா, சாமந்தி பூ, மல்லிகை,... | பயன்படுத்தி வடிவங்கள் உருவாக்குதல் | ▪ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இலைகளை ஒப்பிட்டு ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுவர்.... அவற்றை வரைவர்.<br>▪ அளவு, வடிவம், நிறம், அமைப்பு, மணம் ஆகியவற்றின் அடிப்படையில் இலைகளை வகைப்படுத்துவர்.<br>▪ உண்ணக்கூடிய மற்றும் பிற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் சில இலைகளைக் கண்டறிந்து பெயர்களைக் கூறுவர்.<br>▪ இலையைப் பயன்படுத்தி ஊதல் செய்வர்.<br>▪ இலைகளைத் தேய்த்து (leaf rubbing) படங்களை உருவாக்குவர்.<br>▪ வடிவமைப்புகளை உருவாக்க இலைகளைப் பயன்படுத்துவர்.<br>▪ செடிகள் மற்றும் மரங்களைப் பராமரிப்பர்; மரங்களைச் சேதப்படுத்தாமலிருப்பர். |

TNSCERT-DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | ▪ அளவு, நிறம், மணம், பூவிதழ்களின் அமைப்பு போன்றவற்றை உற்றுநோக்கி மலர்களை விவரிப்பர். (உள்ளூர் மொழி பயன்படுத்தப்படலாம்)<br>▪ நிறம், அளவு மற்றும் மணம் அடிப்படையில் மலர்களை வகைப்படுத்துவர்.<br>▪ மலர்களின் பயன்பாடுகளைப் பகிர்ந்து கொள்வர். (எ.கா. அழகுபடுத்துதல்...)<br>▪ தேவையின்றி மலர்களைப் பறித்தல், தீங்கு செய்தல் அல்லது பறித்தல் கூடாது என்பதை உணர்வர்.<br><br>▪ உள்ளூர் மலர்களைப் பயன்படுத்தி எளிய, சிறிய வடிவமைப்பை (Pattern) உருவாக்குவர்.<br>▪ தாவரங்கள் மற்றும் மரங்களைப் பராமரித்து, மரங்களை சேதப்படுத்தாமலிருப்பர். | | |

TNSCERT - DRAFT Syllabus

| கலைத்திட்ட இலக்கு –10: குழந்தைகள், உணவின் பல்வேறு கூறுகளை அடையாளம் காணுதல் – காய்கறிகள், பழங்கள், தானியங்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து பெறப்படும் பொருள்கள் | | | |
|---|---|---|---|
| **உணவு**<br>▪ எனக்குப் பிடித்தமான உணவு<br>▪ பழங்கள் மற்றும் காய்கறிகள்<br>▪ காய்கறிகள், பழங்களின் கோட்டு வரைபடங்கள்<br>▪ காய்கறிகள், பழங்களை விவரிக்கும் சொற்கள்<br>▪ காய்கள், கனிகள்<br>▪ சுகாதாரமான உணவுப் பழக்கங்கள் | ▪ தமக்குப் பிடித்த உணவு குறித்த கருத்தைப் பகிர்வர்.<br>▪ தம் பகுதியில் கிடைக்கும் பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு (உள்ளூர் மொழி) பெயரிடுவர்; விவரிப்பர்.<br>▪ அவற்றை வரைந்து வண்ணம் தீட்டுவர்.<br>▪ அமைப்பு, நிறம், அளவு, எடை, சுவை, மணம், தன்மை போன்ற காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவர்; ஒழுங்குபடுத்துவர்.<br>▪ தாவரங்களைப் பற்றிய புதிர்களைப் புரிந்துகொண்டு பதிலளிப்பர். (வாய்மொழி)<br>▪ காய்கறி அச்சுகளைப் பயன்படுத்தி, படங்கள் மற்றும் வடிவங்களை உருவாக்குவர்.<br>▪ காய், கனிகளை வேறுபடுத்துவர்.<br>▪ பழங்கள் மற்றும் காய்கறிகளால் செய்யப்படும் சில | **உணவு**<br>▪ உணவின் பாதை: தாவரங்கள் → தோட்டம் (அ) பண்ணை → கடை/சந்தை → உணவுத் தட்டு<br>▪ உணவு தானியங்கள், விலங்குகளிலிருந்து கிடைக்கப் பெறும் உணவுப் பொருள்கள், முளைக்கட்டிய தானியங்கள் (ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியிலும் அடையாளமிடப்பட்ட சீட்டுகளுடன்)<br>▪ முறையான உணவுப் பழக்கங்கள் | ▪ உணவுப் பொருளானது தாவரத்திலிருந்து உணவுத் தட்டிற்கு வரும் பாதையை அடையாளம் காண்பர்.<br>▪ உணவு தானியங்கள் மற்றும் விலங்குகளிடமிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களை அடையாளம் கண்டு பெயர் கூறுவர். (ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியிலாள அடையாளச் சீட்டுடன்)<br>▪ சிறுதானியங்கள், அரிசி, முட்டை, மீன் போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறு உணவு வகைகளைக் கண்டறிவர்; கலந்துரையாடுவர்.<br>▪ படிநிலைகளைப் பின்பற்றி பயறு வகைகளில் ஒன்றினை முளைக்கச் செய்வர். |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | உணவுகளின் பெயர்களைக் கூறுவர்.<br>▪ குடிநீரைக் குடிப்பதற்கு உகந்ததாக மாற்றுவதற்கா படிநிலைகளை அறிவர்.<br>▪ ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களைப் புரிந்துகொண்டு பின்பற்றுவர். (சரியான நேரத்தில் உண்ணுதல், சுத்தமான உணவை உண்ணுதல், உணவை வீணாக்காமல் இருத்தல், நன்கு மென்று உண்ணுதல், நீரைப் பருகுதல்) | | |
| **கலைத்திட்ட இலக்கு 11: குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ள விலங்குகளை உற்றுநோக்கி அவற்றின் பண்புகள் மற்றும் பல்வகைமைத் தன்மையை அறிதல்.** | | | |
| **விலங்குகள்**<br>▪ சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகள்<br>▪ அவற்றில் சிலவற்றின் வாழிடம் மற்றும் இளம் உயிரிகளின் பெயர்<br>▪ சுற்றுப்புறத்தில் உள்ள ஏதேனும் ஒரு விலங்கின் வாழ்க்கை (படக்கதை வடிவில்)<br>▪ செல்ல விலங்குகளின் மீதான அக்கறை | ▪ சுற்றுப்புறத்தில் உள்ள விலங்குகளை உற்றுநோக்குவர். (எ.கா., பூனை, நாய், மாடு, ஆடு, பட்டாம்பூச்சி, காகம், கோழி....)<br>▪ விலங்குகளுக்குப் பெயரிட்டு, அவை உணவு பெறும் முறை, இயக்கம், வாழிடம், அவற்றின் இளம் உயிரிகள் பற்றி கலந்துரையாடுவர்.<br>▪ கால்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விலங்குகளை | **விலங்குகள்**<br>▪ சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகள்<br>▪ சுற்றுப்புறத்தில் காணப்படும் விலங்குகளின் உடல் பாகங்களின் பெயர்கள்.<br>▪ இலைகளால் உருவாக்கப்பட்ட விலங்கு அருங்காட்சியகம்<br>• விலங்குகளின் குழுக்கள் | ▪ சுற்றுப்புறத்தில் உள்ள சில விலங்குகளை உற்றுநோக்கி பொருத்தமான சொற்களால் விவரிப்பர். (எ.கா., ஆடு, தேனீ, சிலந்தி, எறும்பு, கிளி, புறா, வாத்து, மீன்...)<br>▪ உடல் அமைப்பு, அளவு, இயக்கம், போன்ற எளிய காரணிகளின் அடிப்படையில் விலங்குகளை ஒப்பிட்டு, வகைப்படுத்துவர்.<br>▪ 5–6 விலங்குகளின் படங்களைப் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வரைவர். (குச்சி உருவங்கள், கோட்டுப் |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | உற்றுநோக்கி வகைப்படுத்துவர்.<br>▪ 3–4 விலங்குகளின் படங்களை வரைய கற்றுக்கொள்வர். (குச்சி உருவங்கள், கோட்டு வரைபடங்கள், வடிவங்களைப் பயன்படுத்துதல், கட்டங்கள்...)<br>▪ படக் கதையைப் படிப்பர்.<br>▪ விலங்குகளைப் பராமரிக்கும் முறைகளைப் புரிந்துகொண்டு கடைப்பிடிப்பர்; (அவற்றுக்கு உணவளிப்பர், அவற்றைச் சுத்தமாகப் பராமரிப்பர், அவற்றைக் காயப்படுத்தாமல் பாதுகாப்பர்; உரிய நேரத்தில் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வர்) | | படங்கள், வடிவங்களைப் பயன்படுத்துதல், கட்டங்கள்...)<br>▪ இலைகளைப் பயன்படுத்தி 3–4 விலங்கு வடிவங்களை உருவாக்கி, அவை குறித்துப் பேசுவர்.<br>▪ விலங்குலகத்தின் பல்வகைமைத்தன்மையை அறிவர். (நீர்வாழ் விலங்குகள் – எ.கா. மீன்கள், நிலத்திலும் நீரிலும் வாழும் விலங்குகள் – எ.கா. தவளைகள், சுற்றுப்புறத்திலுள்ள சிறிய உயிரினங்கள் – எ.கா. மண்புழு, எறும்பு, பட்டாம்பூச்சி, பறக்கும் விலங்குகள் – எ.கா. பறவைகள், மனிதனுடன் வாழும் விலங்குகள், வீடு/பண்ணை விலங்குகள் ––– பூனைகள், நாய்கள், மாடுகள், ஆடுகள். காட்டு விலங்குகள் ––– காட்டு விலங்குகள் ––– எ.கா. புலி, சிங்கம், ...) |
| **கலைத்திட்ட இலக்கு–12: குழந்தைகள், தம்மைச் சுற்றியுள்ள பல்வேறு போக்குவரத்து முறைகளை அறிதல்.** | | | |
| **போக்குவரத்து**<br>▪ சாலைப் போக்குவரத்தின் பல்வேறு வகைகள்.<br>▪ மிதிவண்டி, தானி (Auto), மகிழுந்து, பேருந்து, சரக்குந்து (Truck), போன்ற வாகனங்கள் | ▪ உற்றுநோக்கிய மற்றும் பயணித்த வாகனங்களைப் பற்றிய தமது கருத்துகளைப் பகிர்வர்.<br>▪ படத்தை உற்றுநோக்கி அதிலுள்ள வாகனங்களின் பெயர்களைக் கூறுவர்.<br>▪ வாகனங்களின் பெயர்களை வரைவர். | **போக்குவரத்து**<br>▪ போக்குவரத்தின் வகைகள்<br>▪ தொடர் வண்டிகளின் வகைகள் | ▪ பல்வேறு வாகனங்களை வரைந்து, பெயரிடுவர், (குறிச்சொற்களுடன் கூடிய அட்டைகள்)<br>▪ பயணிக்கும் இடத்தின் அடிப்படையில் வாகனங்களை (வான், நீர், நிலம்) வகைப்படுத்துவர்; வரைவர்.<br>▪ உருவாக்கப்பட்ட அட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | ▪ சக்கரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு வாகனங்களை வகைப்படுத்துவர். | | விளையாட்டுகளை விளையாடுவர். (பொருத்துதல், சக்கரங்கள், நகரும் இடம் போன்ற காரணிகளின் அடிப்படையில் குழுவாக்குவர், நினைவாற்றல் விளையாட்டுகள்)<br>▪ பல்வேறு வகையான தொடர் வண்டிகள் பற்றி அறிந்து கொள்வர்.<br>▪ விலங்குகள் மற்றும் மனிதர்களின் இயக்கத்தை வாகன இயக்கத்துடன் ஒப்பிட்டு, ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறுவர். |
| **கலைத்திட்ட இலக்கு –13: குழந்தைகள், தம்மைச் சுற்றி நிகழும் வெவ்வேறு மாற்றங்களை உற்றுநோக்கி விவரித்தல்.** | | | |
| –– | – | **நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்கள்**<br>▪ பகல், இரவு நேரத்தில் வானம் , இரவில் இயங்கும் விலங்குகள் இரவில் மலரும் மலர்கள்<br>▪ மனித வளர்ச்சியின் படிநிலைகள். (குழந்தை முதல் முதியோர் வரை)<br>▪ தாவர வளர்ச்சியின் படிநிலைகள்<br>▪ பயணம் மேற்கொள்வதில் கடந்து வந்த மாற்றங்கள். (மனிதர்கள் தோன்றிய காலம் முதல் இன்று வரை) | ▪ ஒவ்வொரு நாளும் பகல் மற்றும் இரவில் வானத்தில் ஏற்படும் மாற்றங்களை உற்றுநோக்கிக் கூறுவர்.<br>▪ குடும்ப உறுப்பினர்கள், சுற்றியுள்ளவர்களின் பகல் மற்றும் இரவு நேர செயல்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவர்.<br>▪ இரவு நேர வானத்தை வரைந்து வண்ணம் தீட்டுவர்.<br>▪ இரவில் இயங்கும் விலங்குகள், இரவில் மலரும் மலர்கள் ஆகியவற்றின் இயல்புகளை அறிந்து கொள்வர்.<br>▪ மனித வளர்ச்சியின் படங்களை (குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை) வரிசைப்படுத்தி, உற்றுநோக்கிப் |

TNSCERT - DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | | | பேசுவர்.<br>▪ தம் உடலில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் குறித்துக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வர். (சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் இயக்கம், பற்கள், உயரம், வலிமை போன்றவற்றை ஒப்பிட்டு)<br>▪ செடியின் வளர்ச்சி நிலைகளை வரிசைப்படுத்துவர்.<br>▪ பயணிக்கும் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் (மாட்டு வண்டி/குதிரை வண்டி –விமானங்கள் தொடர் வண்டி வரை) புரிந்து வெளிப்படுத்துவர்.<br>▪ உற்றுநோக்கிய மாற்றங்களைக் (சுற்றி நிகழும் மாற்றங்கள்) குறித்துப் பேசுவர். |
| **கலைத்திட்ட இலக்கு–14: குழந்தைகள், நீர் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுதல்** | | | |
| | | **நீர் சார்ந்த செயல்பாடுகள்**<br>▪ சில எளிய செயல்பாடுகள்<br>▪ வெவ்வேறு பொருள்களை நீரில் விடுதல். (மரக்கிளை, கூழாங்கல், இறகு, பஞ்சு, நாணயம்)<br>▪ சிறு கூழாங்கற்கள், மண், உப்பு, சர்க்கரை, வண்ணங்கள் ஆகியவற்றை நீருடன் கலத்தல்<br>▪ பொருள்களுடன் நீரைச் சேர்த்தப் பின் அவற்றைத் தூக்குதல். (கடற்பஞ்சு, மணல் உள்ள கலன், கோப்பை) | ▪ வரிசைக்கிரமமான முறையில் வெவ்வேறு செயல்பாடுகளைச் செய்வர்; உற்றுநோக்கியவற்றைப் பகிர்ந்து கொள்வர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | | ▪ துணித்துண்டை நனைத்து அதைச் சூரிய ஒளியில் உலர விடுதல்.<br>▪ சிறிய கொள்கலத்தை நிரப்ப எத்தனை கோப்பைகள் நீர் தேவைப்படுகிறது என்பதையும் ஒரு கோப்பையை நிரப்ப எத்தனை குவளைகள் நீர் தேவைப்படுகிறது என்பதையும் தோராயமாக மதிப்பிடல் மற்றும் சரிபார்த்தல். | |
| **கலைத்திட்ட இலக்கு –15: குழந்தைகள், சமூகத்தில் தங்களைச் சுற்றியுள்ள பல்வேறு மக்களை அடையாளம் கண்டு, அவர்களின் சமூகப் பங்களிப்பைப் புரிந்துகொள்ளுதல்.** | | | |
| **மக்களும் இடங்களும்**<br>▪ சந்தை நிகழும் இடத்தின் தொகுப்புப் படம்<br>▪ நமக்கு உதவும் மக்கள்<br>▪ போக்குவரத்தில் நமக்கு உதவும் மக்கள் (பங்கேற்று நடித்தல்) | • சந்தைக்குச் சென்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர். (எங்கிருந்து, யாரிடமிருந்து என்ன வாங்கினார்கள்?, அங்கே கண்ட காட்சிகள், ஒலிகள் மற்றும் மக்களைப் பற்றிக் கலந்துரையாடுவர்)<br>• மக்களை அவர்களின் தொழில்களுடன் பொருத்திக் கூறுவர். (எ.கா. பால் கொண்டுவருபவர், சமைப்பவர், கற்பிப்பவர், ஓட்டுபவர்.).<br>• தொழில் செய்பவர்களை | **மக்களும் இடங்களும்**<br>▪ வாழிடம் சார்ந்த/சுற்றுப்புறம் சார்ந்த தொகுப்புப் படம் (பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் – அடையாளச் சீட்டுகளுடன்)<br>▪ நடனம் மற்றும் இசைக்கலைஞர்களுடன் கூடிய பண்டிகையின் தொகுப்புப் படம் | ▪ வெவ்வேறு இடங்களில் பணிபுரியும் மக்களுடன் பெயர்களைப் படங்களுடன் பொருத்துவர் – (ஆசிரியர், வங்கி ஊழியர், அஞ்சல்காரர், மருத்துவர், செவிலியர்...)<br>▪ அவர்கள் நமக்கு எவ்வாறு உதவுகிறார்கள் என்பது குறித்துக் கலந்துரையாடுவர்.<br>▪ பண்டிகைகளில் ஈடுபடும் பல்வேறு வகையான கலைஞர்களின் பெயர்களைக் கூறுவர். (நடனக் கலைஞர், பாடகர், சிற்பி, நடிகர், ஓவியர்...)<br>▪ கோட்டுப்படங்களில் உள்ள கலைஞர்களுக்கு வண்ணம் தீட்டுவர். |

TNSCERT- DRAFT Syllabus

| | | | |
|---|---|---|---|
| | அவர்கள் பயன்படுத்தும் கருவிகள்/ பொருள்களுடன் பொருத்துவர். (எ.கா. விவசாயிகள், பழம்/காய்கறி விற்பவர்கள், மளிகைக் கடை உரிமையாளர்கள், பால் விற்பனையாளர்கள், சமையலர்கள்...)<br>• நம்மை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அழைத்துச் செல்லும் உதவியாளர்களைப் போலச் செய்துகாட்டுவர். (ஓட்டுநர்கள், நடத்துநர்கள், வாகனம் பழுதுபார்ப்பவர்கள்) | | ▪ செல்லப்பிராணிகள் நோய்வாய்பட்டால் உதவுபவர்கள், நம்மைப் பாதுகாப்பவர்கள், செய்திகளைத் தருபவர்கள், தோட்டத்தில் பணிபுரிபவர்கள் போன்ற உதவுபவர்களைக் கண்டுபிடிப்பர்; அவர்கள் குறித்துப் பேசுவர். |

**கலைத்திட்ட இலக்கு–16: குழந்தைகளின் கவனக்குவிப்பை மேம்படுத்தவும் மற்றும் உடல்–உணர்வு–இயக்க ஒருங்கிணைப்பிற்கான பல்வேறு இயக்கங்களில் ஈடுபடுதல், அமைப்புகளுடன் பணியாற்றுதல்.**

**இயக்கங்களும் அமைப்புகளும்**

- ஒருங்கிணைப்பு மற்றும் ஆயத்த விழிப்புணர்வுக்கான எளிய அசைவுகளுடன் வகுப்புகளைத் தொடங்கி, இயைபுடைய ஒத்த அமைப்புகளை வரைதலுடன் முடிக்கலாம்.
- முடிந்தவரை விளக்கப்படங்களுடன் – வாய்ப்புள்ள இடங்களில் வயதுக்கு ஏற்ற எளிய அசைவுகளின் தொகுப்பு, உரிய அமைப்புகள் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட இரண்டு செயல்பாடுகளும் கவனத்தை ஒருமுகப்படுத்துவதுடன், உடல்–உணர்வு–இயக்க ஒருங்கிணைப்புக்கும் பயனுள்ளதாக அமையும், தொடக்க நிலை வகுப்பு குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக அமையும்.

TNSCERT - DRAFT Syllabus

| திறன் | திறன் உட்கூறுகள் |
| --- | --- |
| | **அறிவுசார் திறன்கள்** |
| உற்றுநோக்கல் (சுற்றுச்சூழல்/உரை/காட்சிவழி விளக்கம்) | அனைத்துப் புலன்களையும் பயன்படுத்தித் துல்லியமாக உற்றுநோக்கல், (விரிவான உரை & விரிவான விளக்கம்) |
| வினா கேட்டல் | ஒரு வினாவினையோ அல்லது வினாக்களின் தொகுப்பினையோ உருவாக்குதல், தெளிவுபடக் கூறுதல், வினாக்களை வரிசைப்படுத்துதல், வினாக்களின் அடிப்படையில் கண்டறிதல், வினாக்களுக்கான விடைகளை உற்றுநோக்கல் மற்றும் கலந்துரையாடல் மூலம் கண்டறிதல் |
| ஒப்புநோக்கல் | ஒற்றுமைகள்/வேறுபாடுகள்/அமைப்பு முறைகள்/போக்கு ஆகியவற்றை உற்றுநோக்குதல் வெளிப்புற அமைப்புகள்/கருத்தியலான பண்புகளை ஒப்புநோக்குதல் |
| வகைப்படுத்துதல் | வகைப்படுத்துதலுக்கான அடிப்படையை/காரணிகளை வரையறுத்தல், வகைப்படுத்துதலின் அடிப்படையில் பிரித்தல்/ இணைத்தல்/ குழுவாக்கல், பொருத்துதல், ஒரு புதிய அடிப்படையில் மறுகுழுவாக்கம் செய்தல், பிரிவுகள், துணைப்பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துதல், அட்டவணைப்படுத்துதல், வகைப்படுத்துதலை விளக்குதல் |
| அமைப்புகளை அடையாளங்காணல் | உற்றுநோக்கல்/அனுபவங்கள்/தகவல்களின் அடிப்படையில் அமைப்புகளை அடையாளம் காணல் |
| வரிசைப்படுத்துதல் | வரிசைப்படுத்துதல் (முந்தையவற்றிலிருந்து பிந்தையவற்றிற்கு, தொலைவிலிருந்து அருகில் உள்ளவற்றிற்கு திட்டமிடப்பட்ட செயல்பாடொன்றில் வரிசையான படிநிலைகள், வரைபடத்தை (Flow chart) உருவாக்குதல் அல்லது பின்பற்றுதல், காலக்கோட்டினை உருவாக்குதல் |
| செய்முறைகள் | அறிவுறுத்தல்/வழிகாட்டுதல்களைப் பின் தொடர்தல், சோதனைகளைச் செய்தல், ஒரு வினாவிற்கான விடையைக் கண்டறிய எளிய பரிசோதனையை வடிவமைத்தல் |
| படித்துப் புரிந்து கொள்ளுதல் | புரிந்து கொள்ளுதல், புரிந்து கொண்டதற்கான உறுதிப்படுத்துதல்—வருணனை செய்தல்/விவரித்தல்/மற்றொருவருக்கு விளக்குதல் /தொகுத்துக்கூறுதல், முக்கியமான/அறிந்திராத சொற்களை அடையாளம் காணல், புரிந்துகொண்டவற்றைப் பயன்படுத்துதல், அறிவியலுக்குத் தொடர்பான சொற்களைப் புரிந்துகொள்ளுதல் |
| | |

TNSCERT- DRAFT Syllabus

| | |
|---|---|
| **தகவல் தொடர்பு & பிரதிநிதித்துவத் திறன்கள்** | |
| வரைதல் திறன்கள் | படங்களின் மூலமாக வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளுதல், கற்பனையிலிருந்து வரைதல் / புள்ளிகளிட்ட கோடுகளை இணைத்தல் / வழங்கப்பட்ட அறிவுறுத்தல்/வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் / கட்டங்களுக்குள் வரைதல் / அமைப்புமுறைகளைத் தொடர்தல் /வண்ணமிடுதல்<br>அமைப்புமுறைகளைத் தொடர்தல், கண்ணாடி பிம்பங்கள், இட வல வேறுபாடுகள், சமச்சீர்த்தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக ஓவியங்களை உருவாக்குதல் |
| எழுதும் திறன்கள் | உற்றுநோக்கிய நிகழ்வினை விவரித்தல், ஆய்வின் அடிப்படையிலான வெளிப்பாடு – தரவுகளைத் துல்லியமாகக் குறிப்பெடுத்தல் /உற்றுநோக்கியவற்றையும் & முடிவுகளையும் முறையாக அறிக்கையளித்தல் சிறு தொகுப்புரைகள், கற்றவற்றால் பெற்ற பயனை இதழ்களில் வெளிப்படுத்துதல் / வினவுதல் |
| பேசுதல் திறன்கள் | அறிந்தவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல் ... விவரித்தல்/வருணனை செய்தல்/பெயர் கூறுதல், குழுவினரிடத்தில் தனது கருத்துகளை உருவாக்கி வழங்குதல், கலந்துரையாடல்களில் பங்கேற்றல் |
| **வடிவமைக்கும் திறன்கள்** | |
| மாதிரிகளை உருவாக்கிப் பயன்படுத்துதல் | படங்களையும் அவற்றில் உள்ள வரிசைமுறையையும் உற்றுநோக்கச் செய்தல் /தத்தமது கற்பனையிலிருந்து அறிவுறுத்தல்/வழிகாட்டுதல்களைப் பின்பற்றிச் செய்தல் / சுற்றுச்சூழலில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்துதல்/ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு மாதிரியை உருவாக்கிப் பயன்படுத்துதல் |
| **சமூகத் திறன்கள்** | |
| ஒப்பார் குழுவில் | தனது வாய்ப்பிற்காகக் காத்திருத்தல், குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குதல், கூர்ந்து கவனித்தல், மற்றவர்களுக்கு உதவுதல், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல், முறை வரும்போது வழங்குவதற்கு ஆயத்தமாதல், சுழல் முறையில் ஒரு அறிவிப்பாளரை நியமித்தல் |
| வகுப்பறையில் | ஆசிரியரால்/அறிவிப்பாளரால் கொடுக்கப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுதல் /பரிசோதனைகள் மற்றும் செயல்பாடுகளில் செய்முறைகளைப் பின்பற்றுதல், தடைகளைத் தவிர்த்தல், குழுவாகக் கலந்துரையாடல்கள் மற்றும் செயல்பாடுகளில் பங்கேற்றல் |
| அன்றாட வாழ்வில் | பிறரிடத்தும் அனைத்து உயிரிகளிடத்தும் மரியாதை காட்டுதல், அனைத்துத் தொழில்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணிகளுக்கும் மரியாதை அளித்தல், கற்றவற்றை வாழ்வில் பயன்படுத்துதல், தகவல்களின் அடிப்படையில் பொறுப்பான முடிவுகளை எடுத்தல் |

TNSCERT - DRAFT Syllabus

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

தொடக்கநிலை சூழ்நிலையியல் பாடத்திட்டமானது ஆராய்ந்தறிதல் சார்ந்த கற்றலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் நிகழ்வுகளை உற்றுநோக்கி, கேள்விகளை எழுப்புகின்றனர். இந்தக் கேள்விகள், செயல்பாடுகள்/ஆய்வுகள்/மேலதிக உற்றுநோக்கல்களை வடிவமைக்க வழிகாட்டுகின்றன. பண்பறியும் வகையிலும் அளவறியும் வகையிலும் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. தரவுகளை வழங்க பொருத்தமான வடிவம் (அட்டவணை, விளக்கப்படம், வரைபடம், அறிக்கை) தேர்ந்தெடுக்கப்படுகிறது. பகுப்பாய்வு மற்றும் தொடர்புபடுத்துதலின் மூலம், குழந்தைகள், முறைமைகளை அடையாளம் கண்டு, காரண–காரியத் தொடர்புகளை விளக்கி, கருத்துகளை நடைமுறை உலகச் சூழல்களுடனும் தங்கள் சுற்றுச்சூழலுடனும் இணைக்கின்றனர். குழந்தைகள் பல்வேறு வெளிப்பாடுகளைப் பயன்படுத்தி—வாய்மொழி, எழுத்து மற்றும் காட்சி வடிவில்—தங்கள் புரிதலைத் தெரிவிக்கின்றனர். மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டவை, வித்தியாசமாகச் செய்திருக்கக்கூடியவை, மேலும் ஆராய விரும்புவன குறித்துச் சிந்திக்கின்றனர். இணையாகவும் குழுவாகவும் முழு வகுப்பாகவும் கலந்துரையாடல்கள் நிகழ்த்துவதன் மூலம் இணைந்து கற்கிறார்கள். இவ்வகையான கற்றல், கருத்துகளின் கூட்டு உருவாக்கத்தையும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதையும் வளர்க்கிறது.

**மதிப்பீட்டு உத்திகள்**

சூழ்நிலையியலில் பயனுறு மதிப்பீட்டு உத்திகளானவை, வளரறி மதிப்பீடு, தொகுத்தறி மதிப்பீடு மற்றும் குழந்தைகள் முன்னெடுக்கும் (ஒப்பார்/சுய) மதிப்பீட்டு முறைகளை உள்ளடக்கியதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. வளரறி மதிப்பீடானது (கற்றலுக்கான மதிப்பீடு) பாடங்கற்பிப்பின் போது (வினா கேட்டல், உற்றுநோக்கல்) ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான சோதித்தலை உள்ளடக்கியிருப்பதுடன் நிகழ் நேர பின்னூட்டங்களை அளித்து குழந்தைகளை ஊக்கப்படுத்தவும் உதவுகிறது. மேலும், இவ்வாறான முறைகள் ஆசிரியர்களுக்கு குழந்தைகளின் முன்னேற்றத்தைப் பின்தொடரவும், குழந்தைகள் உண்மைகளைத் தவறாகப் புரிந்து வைத்திருப்பதை அடையாளங்காணவும் ஆராய்ந்தறிதலின் அடிப்படையிலான கற்றலை வளர்த்தெடுக்கவும் உதவுகிறது. உற்றுநோக்கி மேற்கொள்ளும் மதிப்பீடு (குழு வேலைகளின் போதும் பரிசோதனைகளின் போதும் வெளிப்படுத்தப்படும் நடத்தைகளை உற்றுநோக்கி மேற்கொள்வது) திறந்த வகை வினாக்களைப் பயன்படுத்தி அறிவியல் சிந்தனையைத் தூண்டுவதன் மூலமாகச் செய்யப்படும் மதிப்பீடானது கூட்டுழைப்பு, அறிதல் திறன்கள் மற்றும் அறிவியல் மனப்பான்மைகளை மதிப்பிட உதவுகின்றன. தொகுத்தறி மதிப்பீடானது (பருவ முடிவில் நடத்தப்படும் தேர்வு) குழந்தைகள் கருத்துகளை முழுமையாகப் புரிந்துள்ளனரா என்பதை விளக்கும் ஒரு துல்லியப்படமாக அமைகிறது. ஒப்பார் & சுய மதிப்பீடானது இளம் கற்போருக்கு கைப்பிடித்துப் படிப்படியாக உயர்த்திச் செல்லும் விதமாகவும் கற்றவற்றைப் பிரதிபலிப்பது, பொறுப்புணர்வுடன் கற்பது, கற்பதற்குக் கற்பது ஆகியவற்றை ஆதரிக்கும் வகையிலும் அமைகிறது. ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் குழந்தையின் கற்றல் வளர்ச்சியின் முழுமையான காட்சியை நமக்கு வழங்குகிறது. தொகுத்தறி மதிப்பீடுகள் மட்டுமே தனித்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என்பதில் அக்கறை செலுத்தப்படுகிறது. ஏனெனில், அவை குழந்தைகளின் ஆர்வத்தைக் குறைக்கக்கூடும். மதிப்பீட்டின் நோக்கமானது முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஆக்கபூர்வமான பின்னூட்டத்தை வழங்குவதே தவிர, வெறும் மதிப்பெண்களை வழங்குவது அல்ல.

TNSCERT-DRAFT Syllabus